விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம்

2025 September 16-30

இன்ஸ

எ இதழ்



"அழகு "
குறிப்பு எழுது என்றனர்
உன் பெயரை மட்டும்
பலமுறை எழுதி விட்டு வந்தேன்!

-லி.நௌஷாத் கான்-

Rs. 100

7094053241 indhrumail@gmail.com

அனைவருக்கும் வணக்கம்.

இன்று ஈ இதழின் வெப் வெர்சனை பலரும் பாராட்டினார்கள். சிலர் புரியவில்லை என்றார்கள்.. கட்டமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் முழுமையடையும்போது புரியும்.

அட்டைப்பட கவிதைகளை பரிசாக மாற்றியதற்கு பலரும் பாராட்டினார்கள்.

கண்கவரும்படி சிறப்பாக உள்ளதாக அனைவருமே பாராட்டினார்கள்.

உங்கள் பாராட்டுக்கு நன்றி. இதனை வடிவமைக்கும் அனுசா, ஹரி அவர்களுக்கு பாராட்டுக்கள்.

புத்தகம் தொடர்பான விளம்பரங்களை இலவசமாக (இன்று-வில் எழுதுபவர்களுக்கு மட்டும்) வெளியிட முடிவு செய்துள்ளோம்..

மற்ற விளம்பரங்கள் குறைந்தபட்சம் ரூ-100 (இரண்டு இதழ்களில் வெளியாகும்) உங்களுக்கு தெரிந்தவர்களிடம் சொல்லுங்கள்.

புதிய வாசகர்களும், எழுத்தாளர்களும் தொடர்ந்து இணைந்து வருகின்றனர். மிக்க மகிழ்ச்சி...

அனைவருக்கும் நன்றி

வாழ்த்துக்கள்.

வெ.கோபிநாத், ஆசிரியர்.

September 2025

Mo	Tue	We	Thu	Fri	Sat	Sun
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30					

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

YouTube
@indhrudotin

www.indhru.in

புதுக் கலைதை



முத்து ஆனந்த்
வேலூர் 7010482479

சேமிப்பு

உன்
கண்களில்
புதியதோர் உருட்டு!
என்
கா த ல்
மனம்
மயங்கிச் சரிகிறது
உன்னிடம்!

நான்

உங்கள்
திறமை
எதிலும்
அழுத்தமாகப் பதிய
வேண்டும்
என்கிறாள
என்
கா த லி!
மு த் த மி ட த்
தயாராகிறேன்
நான்!

எமக்குத் தொழில்
கவிதைதான் என்று
நினைத்திருந்தேன்!
அதை
நீ
கா த ல்
என
மாற்றும் வரை!

ஒரு
மு த் த மி ட் டு
விட்டுச் செல்கிறாய்
நீ!
சேமிப்புக்
கணக்கைத்
தொடங்குகின்றது
என்
கா த ல்!

ஊம்....சொல்றியா?!
ஊஹூம்....சொல்றியா?!
நீ
ஊம்....
சொல்லும்
போதெல்லாம்
வேட்டையாடும்
என்
கா த ல்
நீ
ஊஹூம்....
சொல்லும்
போதெல்லாம்
விடுமுறை
விட்டு விடுகிறது!

அவசரம்
கொஞ்சம்
அவசரக் குடுக்கை
தான்
உன் துப்பட்டா!
என்னைப் பார்க்கும்
போதெல்லாம்
உடனடியாக
நழுவுகிறதே

-லி.நௌஷாத் கான்-
கவிதைகள்



பறவையாய் மாறடி
யாருமில்லா
விண்வெளியில்
காதலோடு பறந்து திரிவோம்!

ஐந்தடி உயர பனித்துளி
புல்வெளியில் மலர்வதை
இப்போது தான் காண்கிறேன்!

மதம் பிடித்து திரிந்த கும்கி
உன் ஜிமிக்கி காட்டில்
அடங்கி தான் போகிறது!

நீ அணிந்திருக்கும்
மூக்கு கண்ணாடியில் கூட
எனது பிரதிபலிப்பாய்
நீயே தெரிகிறாய்?!

உன் கண்ணாடி வளையல்கள்
சிணுங்கி பார்த்ததுண்டு
இப்போது என்னடி
உன் மூக்கு கண்ணாடி கூட
வெட்கத்தால் சிவக்கிறது!

கருப்பு கண்ணாடி
அணிந்து கொண்டு
உனக்கு தெரியாமலே
உன்னை இரசிப்பதும்
அலாதி சுகம் தான்!

கனவுகள் மீது
அவ்வளவு பிரியங்கள் இல்லை
நீயே
கனவாய் போன பிறகு!

மினி கதை

தீயணைப்பு



மலர்மதி 8667417874

கொழுந்துவிட்டு எரிந்த தீயை அரைமணி நேரம் போராடி அணைத்து பெரும் தீவிபத்திலிருந்து அந்த வளாகத்தைக் காப்பாற்றினார் தீயணைப்பு துறை அதிகாரி தீபன்.

மறுநாள் அவர் வயிற்றில் தீ பற்றி எரிவது போன்ற எரிச்சல்! அதை அணைக்க டாக்டரிடம் ஓடினார் தீபன்.

இந்திய நகரங்கள் சிறப்பு பெயர்கள்

பொற்கோவில் நகரம்	அமிர்தசரஸ்
அரண்மனை நகரம்	கொல்கத்தா
இந்தியாவின் பூந்தோட்டம்	பெங்களூரு
இந்தியாவின் நுழைவாயில்	மும்பை
இந்தியாவின் மான்செஸ்டர்	மும்பை
இளஞ்சிகப்பு நகரம்	ஜெய்ப்பூர்
அரபிக் கடலின் அரசி	கொச்சின்
இந்தியாவின் நறுமணத் தோட்டம்	கேரளா
பஞ்ச நதிகளின் நிலம்	பஞ்சாப்
கிழக்கின் ஸ்காட்லாந்து	மேகாலயா
ஏழு தீவுகளின் நகரம்	மும்பை
பாறை நகரம்	சண்டிகர்
இந்தியாவின் ஆபரணம்	மணிப்பூர்
வட இந்தியாவின் மான்செஸ்டர்	கான்பூர்
இந்தியாவின் கோயில் நகரம்	புவனேஷ்வர்
கீழை நாடுகளின் வெனிஸ்	ஆலப்புழை
வங்காளத்தின் துயரம்	தாமோதர் நதி (மேற்கு வங்காளம்)
அஸ்ஸாமின் துயரம்	பிரம்மபுத்திரா
பீகாரின் துயரம்	கோசி
தென்னகத்தின் மான்செஸ்டர்	கோயம்புத்தூர்
மாம்பழ நகரம்	சேலம்
தமிழ்நாட்டின் ஹாலந்து	திண்டுக்கல்
மலைக்கோட்டை நகரம்	திருச்சி
முத்து நகரம், துறைமுக நகரம்	தூத்துக்குடி
கோயில் நகரம், உறங்கா நகரம்	மதுரை
மலைகளின் ராணி	ஊட்டி
தமிழகத்தின் நெற்களஞ்சியம்	தஞ்சாவூர்
தென்னாட்டு ஸ்பா	குற்றாலம்
ஏழைகளின் ஊட்டி	ஏற்காடு
இந்தியாவின் விளையாட்டு மைதானம்	காஷ்மீர்



முபாரக் கவிதைகள்

நேசிப்பவர்களிடம்
எப்போதும்
தூரமாகவேயிருக்கிறேன்...
சிறு பிரிவைக் கூட
தாங்க முடியாத இதயம்
என்னுடையது!

**

எப்படியும்
வாழலாமென நினைக்கும்
மனிதன் வாழும்,
எப்படியாவது வாழவேண்டுமென,
உழைக்கும் எறும்புகளும் வசிக்கின்றன!

**

குஞ்சுகளுக்கான
இரையோடு
கூடு திரும்பும் பறவையின்
மனநிலையோடு,
ஒரு நாளாவது வாழ்ந்திடவேண்டும்!

**

துயரமான நேரங்களில்
காணாமல் போகிறார்கள் நேசித்தவர்கள்,
இன்னும் துயரம் கூடிக்கொண்டேயிருக்கிறது...
சாரல் மழை பெருமழையாகிறது,
என் வானத்தில்!

சிரிப்பு ----------

இளைஞன் 1: நம்ம தலைவருக்கு பொது அறிவு கம்மின்னு எதை வைத்து சொல்ற?
இளைஞன் 2: நைட்டு வாச் மேன்களுக்கும் ஒர்க் ப்ரம் ஹோம் வசதி செய்து தரப்படும்ன்னு தேர்தல் வாக்குறுதியில் சேர்க்க சொல்றாரே!

ஒருத்தி : கோயில் கோயிலா போய் விளக்கேற்றி கும்பிட்ட பிறகா உனக்கு இந்த புருஷன் கிடைத்தார்?
அடுத்தவள் : இல்லை. ∴பேஸ்புக்கில் அக்கவுண்ட் துவங்கியதும் கிடைச்சார்!

நாஞ்சில் சு. நாகராஜன் பறக்கை, கன்னியாகுமரி.
செல். 9486387026

ஆரம்பம்...
இன்று எ இதழ்
7
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com



நடேஷ் கன்னா

கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

கண்டதும் கேட்டதும்

1 கோவில்பட்டியில் உள்ள
ஒரு சலூன்
கடையின் பெயர்
வந்தா வெட்டுவோம்

2. இந்தோனேசியா ஒரு
இஸ்லாமிய நாடு அந்த
நாட்டு
ரூபாயில் விநாயகர் படம்
அச்சிடப்பட்டு இருக்கும்.
அந்த நாட்டின்
விமானத்தின் பெயர்
கருடன்
ஏர்லைன்ஸ்.

3. கறி குழம்பில் கறி
இருக்கு
மீன் குழம்பில் மீன் இருக்கு
பிரியாணியில் பிரியாவை
காணோம்

4. இசையை கேட்க வலது
வலது காது
சிறந்தது பேசுவதற்கு இடது
காது
சிறந்தது

5. நீல நிற சாலைகளை
கொண்ட
ஒரே நாடு கத்தார்.

நினைவுகளின்
கனமேறிய
சுமையொன்று..




சசிகலா திருமால்


கீழப்பழுவூர்

இரக்கமற்ற பார்வைகளால்
இதய நரம்புகளை
அறுத்தெறிந்து
குருதி வழிய செய்கிறாய்
வழிந்தோடும் குருதியிலும்
வலுக்கட்டாயமாய்
நின் நினைவுகளே
உறைவதறிவாயா நீ?..

எரியமிலமென நீ உமிழும்
வெறுப்போ
இதயதசைகளை அரித்துக்
கொண்டிருக்கிறது
மெல்ல மெல்ல..
உற்றாரின் அறிவுரைகளை
உதறித் தள்ளியே
உன்னிடமே மன்றாடுகிறது
மனம்..

இப்படி தான்
என் தனிமையின்
வெறுமைக்கு துணையாகி
மென்று விழுங்கி செரித்துக்
கொண்டிருக்கிறது
மறந்திடவியலா
நின் நினைவுகளின்
கனமேறிய சுமையொன்று...





Free Advertisement

அழகர் பிரிண்டர்

ALAGAR Printers & Studio CELL: 9843018120

திருமண அழைப்பிதழ்
போட்டோ & வீடியோ
ஜிராக்ஸ்
ஆதார் கார்டு பிரிண்ட்
I.D கார்டு
கலர் ஜிராக்ஸ்
விசிட்டிங் கார்டு
விமான டிக்கெட்

URGENT DELIVERY DONE HERE

ஸ்டுடியோ ஜிராக்ஸ்



எப்படி படிப்பது என்ற குழப்பமா?
நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?
சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241



எழுத்தாளர் மலர்மதி அவர்கள் எழுதிய மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் 32 சிறுகதைகளின் தொகுப்பாக "இறைவனிடம் கையேந்துங்கள்" என்ற தலைப்பில் புஸ்தகா நிறுவனத்தார் வெளியிட்டு இருக்கிறார்கள். பிரபல எழுத்தாளர் ஆர்னிகா நாசர் அவர்களின் வாழ்த்துரையுடன் வெளிவந்துள்ள இப்புத்தகத்தின் விலை: ரூ. 180/-.
தொடர்புக்கு: 8667417874

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக்கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ்
Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...







ஆரம்பம்...
இன்று இதழ்
www.indhru.in
7094053241 indhrumail@gmail.com

நதிகள் செய்பவன் கவிதை நூல் வெளியீட்டு விழா



திருச்சி, செப்.10- திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் இனிய நந்தவனம் வாசகர் வட்டம் சார்பில் கவிஞர் முபாரக் எழுதிய நதிகள் செய்பவன் கவிதை நூல் வெளியீட்டு விழா திருச்சிராப்பள்ளி தமிழ் சங்கம் குளிர்மை அரங்கில் நடைபெற்றது.

திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க தலைவர் இந்திரஜித் தலைமை வகித்து நதிகள் செய்பவன் கவிதை நூலை வெளியிட திருச்சிராப்பள்ளி ராயல் லயன்ஸ் சங்க சாசன தலைவர் முகமது சபி நூலின் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார். கல்வியாளர் ஜெயலட்சுமி நூல் ஆய்வுரையாற்றினார். கவிஞர் கவிசெல்வா, இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கிழக்கு கிளை தலைவர் முகம்மது அபுபக்கர் சித்திக் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.


நதிகள் செய்பவன் கவிதை நூல் ஆசிரியர் கவிஞர் முபாரக் ஏற்புரையாற்றினார்.

முன்னதாக திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்க செயலர் விஜயகுமார் வரவேற்க, நிறைவாக இனிய நந்தவனம் மாத இதழ் மக்கள் தொடர்பாளர் தனபால் நன்றி உரையாற்றினார். இனிய நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்ச்சியினை ஒருங்கிணைத்திருந்தார்.

திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கம் இனிய நந்தவனம் வாசகர் வட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.








தவறியும்
கைப்பேசி தந்து
மூலையை
சலவை செய்யும்
அடிமை பொருளுக்கு
ஒப்பந்தம் செய்யாதீங்க
எளிதாக...
மீட்க முடியாது
ஜாக்கிரதை.

திருச்சிற்றம்பலம்சுரேஷ்





அடிக்கடி கனவு தோன்றும்
ஆயிரம் எண்ணம் மோதும்
துடிக்கும் என் இதழ்கள் சொல்ல
நாணமோ தடை விதிக்கும்
படிக்காத பாடம் ஒன்று
பன்முறை மனதில் தோன்றி
அடிக்கடி ஏதோ சொல்லி
அலையென நெஞ்சில் மோதும்.



7094053241 indhrumail@gmail.com

வாசகர் வாய்ஸ்

இன்று ஈ இதழ் செப்1-15 படித்தேன்.
பக்கத்திற்குப்பக்கம் சிறப்பான படைப்புகள்.
படைப்புகளுக்கு பரிசுகள்.. வண்ணத்தில் இன்று ஈ இதழ் எண்ணத்தில் ஆழமாய் பதிகிறது.புதுமைகளை அறிவித்து வாசகர்களை உற்சாகப்படுத்தும் ஆசிரியர் அவர்களை வெகுவாக பாராட்டி மகிழ்கிறேன்.





கவிஞர் இல.இரவி
செ.புதூர்.612203
செல்:9952113194



இ ஆரம்பம்... இன்று ஈ இதழ்
www.indhru.in
12
7094053241 indhrumail@gmail.com



கண்ணாமூச்சி தீவு

கண்ணாமூச்சி
விளையாட்டில்
கண்களைக் கட்டிக்
காதல் தீவிற்கு
வழி காட்டுகிறாய்!
அங்கே நான்
உன்னைக்
கண்டுபிடித்து
என்னையல்லவா
இழந்தேன்!!!!

கோவைக்கவி புவனா
கோயமுத்தூர்

குளிர்ந்த காற்று
அடர்த்தியான மழை
ஆவி,பறக்கும்
தேநீர்
தேநீர் கோப்பை,
காதலியின் அதரங்களில்
கதகதப்பான மெல்லிய சூடு
எனக்குள், படர்ந்தது

வறண்ட நதிகள்
ஒரு பொழுதும்
விரக்தி அடைவதில்லை
மழைக் காலம்,
வருமென
நம்பிக்கையில்
காத்து,, கிடக்கின்றது

வான பெண்ணின்
தலையில்
இயற்கை காதலன்
செல்லமாக
கொட்டியதுதான்
மழையானது

கே.அசோகன் சென்னை,



"அதோ போறாரே, அவர்தான் என் மாமா. அப்பப்போ useful link எல்லாம் எனக்கு அனுப்பிட்டேயிருப்பாரு"

"அவர் பேரு? "

"Link'eswaran!



டீ. என். பாலகிருஷ்ணன் மடிப்பாக்கம்



சின்னஞ்சிறு தகவல்கள்.

தொகுப்பு M. ராதாகிருஷ்ணன்
வாணியம்பாடி செல் 9442811258

இந்தியாவில் முதன் முதலில் பஞ்சாயத்துத் தேர்தல் நடந்தது 1926 ல்.
இத்தாலி தேசத்து மக்கள் தமது அதிர்ஷ்ட எண்ணாக 13 யை கருதுகிறார்கள்.
தாகூரின் ஜனகன 24.01.1950 ல் இந்தியாவின் தேசிய கீதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
கிரேக்க நாட்டின் தேசிய கீதத்தில் 128 வரிகள் உள்ளன. உலகின் மிகப்பெரிய தேசிய கீதம் இதுதான்.
வெறும் பச்சை நிறத்து துணியை த் தேசியக் கொடியாக லிபியா நாடு பயன் படுத்துகிறது.
ஏர் இந்தியா மகாராஜாவை உருவாக்கியவர் உமேஷ்ராவ் என்ற ஓவியர்.
ஒரு கிலோ எடையுள்ள தேனை சேகரிக்க தேனிக்கள் 6.68லட்சம் பூக்களை சந்திக்கின்றன.
துணி சாயம் ஏற்றுவதற்குக் கடல் உப்பு பயன் படுகிறது.
மனிதன் இறந்த பின்பு ஒரு வாரம் வரையில் தலைமுடி, நகம் போன்றவை வளருகின்றன.
கின்னஸ் புத்தகம் 46 நாடுகளில் 37 மொழிகளில் வெளிவருகிறது.

விண்வெளியில் செயல்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் தினமும் 2 மணி நேரம் உடற்பயிற்சி செய்கிறார்கள்
உலகில் இப்போது7,806 மொழிகள் புழக்கத்தில் உள்ளன

முத்து ஆனந்த்
வேலூர்

7094053241 indhrumail@gmail.com

தன் நலம் பேண்

தன் நலம் பேணல்
தகாத செயல், அல்ல.

தன் பொறுப்பை தாமே தாங்குவர்;
அவர்.

தன் முடிவை தானே
எடுக்கும் தகமையாளர்.

தன் வினைக்கு எவரையும் சுட்டி
குறை காணா நெறியாளர்.

எவரையும் தன் செயலுக்கு த
ுணை தேட மாட்டார்.

மற்றுள்ள எவரும்
அவரைக் குறை சுட்ட இயலாது.

அவரால் எவர்க்கும்
ஒரு தொல்லை இல்லை.

அமைதியாய் வாழ்வர்.

அது பொது நலம் ஆகாதா?



சசிகலா விஸ்வநாதன்
செல் 99000 88027



Emergency Helpline No.	
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline





ஹைக்கூ கவிதைகள்

வானமும் வசப்படும்
நீ முயற்சியோடு
ஒன்றாக இசைந்திட்டால்





தீயையும் இதமாக அணைக்க
தென்றலால் மட்டும்
எப்படி முடிகிறது?

ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம் அஞ்சல் கைப்பேசி -9600886441.



